# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்

# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

**பாடம்:- தமிழ் மொழியும் இலக்கியமும்**

சுட்டெண்:...................... **தரம் - 09** **நேரம் : 02 மணி**

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி - I

**01. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. அடர்ந்த காட்டின் நடுவே சீதா கங்கை ஓடிக்கொண்டிருந்தது. இங்கு காடு என்பதன் ஒத்த கருத்து
    1. பருவதம் 2. அளகம் 3. கசடு 4. ஆரணியம்

02. மன்னன் தனது பெருஞ்சேனைக்கு கட்டளை இட்டான். இங்கு கட்டளை என்பதன் ஒத்த கருத்து
    1. சம்பளம் 2. ஆனை 3. ஆணை 4. சன்மானம்

03. இறைவன் பக்தனுக்கு அருள்பாலித்தார். இங்கு அருள் என்பதன் எதிர்கருத்து
    1. எளிமை 2. மருள் 3. தருள் 4. இருள்

04. நாம் பிறரை இகழ்தல் தவறான செயலாகும். இங்கு இகழ்தல் என்பதன் எதிர்கருத்து
    1. பழித்தல் 2. ஏசுதல் 3. புகழ்தல் 4. அடித்தல்

05. ஆயன் என்பதன் எதிர்பாற் சொல்
    1. ஆச்சி 2. ஆயின் 3. ஆய்ச்சி 4. ஆயை

06. நெடுங்காலம் வாழ்பவன்
    1. சிரஞ்சீவி 2. சிறுபட்டி 3. சதாவதானி 4. குரவர்

07. சின்னஞ்சிறிய சிட்டு ஒன்று மலரில் தேன் குடித்தது. இங்கு சின்னஞ்சிறிய என்பது.
    1. அடுக்குத் தொடர் 2. அடுக்கிடுக்குத் தொடர்
    3. இரட்டைக் கிளவி 4. இணைமொழி

08. புலி உறுமும் போல கோழி
    1. கூவும் 2. கத்தும் 3. கீச்சிடும் 4. கொக்கரிக்கும்

09. பொரியல் உண்டேன் இதில் இடம்பெறும் ஆகுபெயர்
    1. பெருளாகுபெயர் 2. குனவாகுபெயர்
    3. தொழிலாகுபெயர் 4. காலவாகுபெயர்

10. அஃறிணை ஒன்றன்பால் ஒருமைப் படர்க்கை பெயர்ச் சொல்லாய் அமைவது
    1. ஆசிரியர் 2. பசுக்கள் 3. குயில் 4. அவைகள்

11. இதயம் அழுகிறது என்ற கவிதையின் ஆசிரியர்.
    1. முருகையன் 2. அன்பு முகைதீன்
    3. ராணிசிதம்பரநாதன் 4. பாரதி



agaram.lk

12. வினைச் சொல்லின் சிறப்பிலக்கணம்
    1. காலம் காட்டுதல்
    2. வேற்றுமை உருபேற்றல்
    3. அடைமொழிகளை ஏற்றல்
    4. விகுதிகளை ஏற்றல்

13. கழுத்து, ஆபத்து, நிலப்பெரும் பிரிவு எனும் பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
    1. கலம்
    2. பார்
    3. பூமி
    4. கண்டம்

14. அடியிடுதல் எனும் மரபுத் தொடர் தரும் கருத்து
    1. இடம்பெயர்தல்
    2. பின்பற்றுதல்
    3. ஆரம்பித்தல்
    4. மூலாதாரம்

15. பசியால் வாடினான், என்பதில் ஆல் உருபு தரும் பொருள்.
    1. காரணப்பொருள்
    2. கருவிப் பொருள்
    3. மூலப் பொருள்
    4. இடப் பொருள்

16. இருபாற் பொதுச் சொல்லாக அமைவது
    1. சிறுவன்
    2. ஆசிரியை
    3. மாணவன்
    4. அதிபர்

17. காலை உணவை உண்டான் இதில் உள்ள எழுவாய்
    1. உணவு
    2. அவன்
    3. காலை
    4. உண்டான்

18. எழுத்துப் பிழையற்ற சொல்
    1. வேர்வை
    2. உடைமை
    3. வெத்திலை
    4. சமயல்

19. கூட்டுப் பெயர் அல்லாதது
    1. நோயாளி
    2. வானொலி
    3. சுடுகலன்
    4. வானவில்

20. ஆறாம் வேற்றுமைக்குரிய உருபு
    1. ஆல்
    2. கு
    3.ஐ
    4. அது

(20x2= 40 புள்ளிகள்)

## பகுதி - II

**01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக**

01. விஞ்ஞானத்தின் நன்மை தீமை
02. போதையால் மாறும் பாதை
03. நான் சென்ற கல்விச் சுற்றுலா
04. காடுகளைப் பாதுகாப்போம்

(20 புள்ளிகள்)

**02. உமது பாடசாலையில் இடம்பெறவுள்ள தமிழ்மொழித்தின விழாவுக்கான அழைப்பிதழ் ஒன்றைத்தயாரிக்க.**

(10 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

**03. பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.**

1. “மலைநாட்டுப் பிரயாணம்” என்ற கட்டுரையை எழுதியவர் யார்?
2. “யார் சிறந்தவர்” எனும் பாடத்தில் ரோஜா வசித்த இல்லத்தின் பெயர் யாது?
3. “மருமகனுக்கு விருந்து” எனும் நாட்டார் கதையில் கூறப்படும் உழைக்கும் மக்கள் குடும்பங்களின் சீதனப் பொருட்கள் எவை?
4. “ஒரு சின்னஞ்சிறு பூச்சி” எனும் கதையில் பூச்சியின் மீது மகன் ஆத்திரம் கொள்ளக் காரணம் யாது?

(20 புள்ளிகள்)

**04.** பின்வரும் ஒலிவேறுபாட்டுச் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.

1. தாலம்
2. கன்னல்
3. வாலை
4. வாளை
5. வாழை

(10 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk